**C.O.S.No.04/2025** தேதி – 11.02.2026

**வா.சா.1.– பரந்தாமன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–**

எனது வாதி நிறுவனம் 5 நபர்கள் கொண்ட ஒரு பார்ட்னர்சிப் நிறுவனம் என்றால் சரிதான். நான் பவர் ஏஜெண்ட் ஸ்தானத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் இந்த நிறுவனத்தின் வாதிக்கும், பிரதிவாதிக்கும் முகவராக செயல்பட்டேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு பங்குதாரர் மட்டுமே சம்மதம் தெரிவித்து கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மற்ற பங்குதாரர்கள் அனைவரும் எனக்கு சம்மதம் தெரிவித்து கொடுத்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் நீதிமன்றத்தில் தாவா வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு சாட்சியம்அளிப்பதற்கு அனுமதி கொடுக்காததால் நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை வாக்குமூலம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான்தான் பரந்தாமன் என்பதை காட்டக்கூடியதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு பவர் கொடுத்த நபர்கள் அனைவரும் இன்றுவரை உயிருடன்தான் இருக்கிறார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் அனைவரும் உயிருடன்தான் இருக்கிறார்கள். எனது நிருபண வாக்குமூலத்தில் எம்.பார் காட்டன் கம்பெனி எனது கம்பெனி என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி கம்பெனியில் இருந்து 03.03.2024 ல் வா.சா.ஆ.4 மூலம் காட்டன் பேல்கள் அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். ஒரு குவிண்டால் ரூபாய் 16872/– என்று பேசி அனுப்பி

வைத்தார்கள் என்றால் சரிதான். அனுப்பி வைத்த பருத்தி பஞ்சு தரம் இல்லாமல் இருந்ததால் ரூபாய் 4000/–த்தை குறைத்து ரூ.12872/– என விலை நிர்ணயம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்தை 2ம் பிரதிவாதியின் தந்தை நடத்தி வந்தார் என்று சொன்னால் நான் பஞ்சு சப்ளை செய்வதற்கு முன்னால் நடத்தி வந்தார். 2ம் பிரதிவாதியின் தந்தையும், தாயாரும் 2022ல் நடந்த சாலை விபத்தில் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2022ல் பெற்றோர்கள் இருவரும் இறந்துவிட்ட சூழ்நிலையில் 2ம் பிரதிவாதி கம்பெனியை நிர்வாகம் செய்யும் நிலமைக்கு தள்ளப்பட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி 20 வயது நிரம்பியர் என்பவதால் எங்கள் நிறுவனமும், மற்ற நிறுவனங்களும் தரமற்ற பஞ்சுகளை சப்ளை செய்து அதனால் 2ம் பிரதிவாதி நிறுவனம் நஷ்டம் அடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதியும், பிரதிவாதியும் பேசியதன் அடிப்படையில் குவிண்டால் ஒன்றுக்கு 12872 x 185 = 17,31,963/– மட்டுமே செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்று சொன்னால் வழக்குரையில் கோரிய தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டும். வழக்குரையில் கேட்டுள்ள தொகை கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.